மாண்புமிகு திரு. எம். **விஜயசாரதி :** (அ) மற்றும் (ஆ) 1983–84-ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ், அரசு துவக்கவுள்ள 10 புதிய விடுதிகளில் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் மாணவியர் விடுதியும் ஒன்றாகும்.

திரு. க. **பாரமலை :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சாதகமான பதில் அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆர். எஸ். மங்களம் கண்மாயில் புதிய வடிகால் வெட்டும் திட்டம்

130—*வினா எண் 17382—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்களம் கண்மாய் 560 அடி நீளமுள்ள தாம்போகி தண்ணீருக்குப் போக்கு இல்லாததால் புதிய வடிகால் வெட்டும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றிய கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால் இதற்கான ஒரு மதிப்பீடு ரூ. 25.70 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே ரூ. 25.70 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 'நீண்ட காலமாக இந்தத் திட்டம் நடைபெறாமல் இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 5–12–1973-லே போடப்பட்டு அரசுக்கு வந்து இங்கே தேங்கிக் கிடக்கின்றது. எனவே அமைச்சர் அவர்கள் சீக்கிரத்தில் ஏற்பாடுகள் செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. **யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஏற்கனவே பரிசீலனையில் உள்ளது. தற்போது கூடுதல் விவரங்கள் தேவைப்படுகின்ற காரணத்தினால், தல அதிகாரிகளிடம் இருந்து அந்த விவரங்கள் கோரப்பட்டு இருக்கின்றன. அந்தக் கூடுதல் விவரங்கள் வந்தவுடன், அதன் அடிப்படையில் அரசு இந்தத் திட்டத்தை ஆய்வு செய்யும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1984 பிப்ரவரி 22]

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆர். எஸ். மங்களம் கண்மாய் 20 கிலோ மீட்டர் அளவு உள்ள, 12 ஆயிரம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி கொடுக்கக்கூடிய மிகப் பெரிய கண்மாய். இந்தக் கண்மாயின் தென் பகுதியில் 560 அடி நீளமுள்ள ஒரு கலுங்கு இருக்கிறது. அந்தக் கலுங்கில் மழைக் காலத்தில் தண்ணீர் அதிகமாகப் போவதன் காரணமாக, ஆர். எஸ். மங்களம் கண்மாய்க்கு இடையிலே உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அழிந்து விடுகின்றன. இதை கடந்த 7 வருடங்களாக அரசினுடைய பார்வைக்கு கொண்டு வந்தேன். இருந்தாலும், கூட, இன்றைக்கு வரையிலும் எஸ்டிமேட் சேங்க்சன் ஆகாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே சீக்கிரத்தில் அந்த எஸ்டிமேட்டை சேங்க்சன் செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல இப்போது ஆய்வு நிலை முடிந்து, அதற்குக் கூடுதல் விவரங்கள் தேவைப்பட்ட காரணத்தால் தல அதிகாரிகளிடம் அந்த விவரங்களைக் கேட்டிருக்கிறோம். ஆகவே அந்த விவரங்கள் வந்த பிறகு இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நந்தன் கால்வாய்த் திட்டம்.

(*131—வினா 19336)—திரு. ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் நந்தன் கால்வாய்த் திட்டம் முடிவு பெற்றுவிட்டதா?

(ஆ) சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீரை நந்தன் கால்வாய்க்கு விடும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) ஆம். (ஆ) இல்லை.